முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.09.2024

1. சோதிநிலை கொண்டு பேருலகில்
சூட்சுமமாய் வரம்பல தருகின்ற
ஆதியந்தமிலா அருட்பெருஞ்சோதியான
அரங்கமகா ஞானியர் யானும்

2. யானுமே குரோதி நங்கை திங்கள்
உபய வாரமான குருவார அருளாசி
ஞான உலகம் அமைய உரைப்பேன்
நன்னெறி புகட்டி தருமம் காக்கின்ற

3. காக்கின்ற அரங்கனென் பிரணவக்குடிலை
கலியுக கைலாய சபையாக எண்ணி
ஆக்கமுடன் உலகோர் வந்து சேவிக்க
அழியாமை வரம் அடைவது உறுதி

4. உறுதிபட சோதி வடிவில் என்னோடு
உயர் ஞானிகள் பலரும் கலந்து
ஆறுமுகனாரும் சுடராக இணைந்தருள
ஆற்றலுடன் அனுதினம் குடிலில் நடக்கும்

5. நடக்கும் குருபூசையாம் சோதி வழிபாட்டில்
நம்பகமுடன் மக்களெல்லாம் கலந்து வர
தடையின்றி தொடர்ந்து வந்து சேவிக்க
தானவர்கள் வேண்டல் யாவும் பலிதமாகும்

6. ஆகவே வேண்டி வரும் சிறுவர்கட்கு
அகசுத்தியுடன் ஞானம் மிகுந்து
மகிழவே மனனம் கல்வி கேள்வியிலும்
மதிக்கவே சிறந்து விளங்குவர்

7. விளங்கிடவே என்தட தவநூல் தீட்சை
வினை நீக்கி விருப்ப வாகையை
களங்கமற தந்து எதிர்காலத்தில்
கண்டுரைப்பேன் நிலை பணி அடைய அருளும்

8. அருளவே அரங்கனென் தருமத்தின்
அருளமுது உண்டு வருவதுடன்
பொருளுதவி தருமவழி செய்து
புண்ணிய பலமும் கூட்டிக் கொள்ள

9. கொள்ளவே தீவினை பற்றாதபடி
குறைவிலா நன்னடத்தை கூடி
அல்லல் தரும் சேர்மானம் அணுகா
ஆபத்து கண்டமிலா பாதுகாப்பு மிக்க

10. மிக்கநல் ஞான சேய்களாக
மேலவர்கள் போற்றும் ஞானவான்களாக
ஆக்கமுடன் இளஞ்சிரார்கள்
அனைவரும் என் ஆசிபட தேறி

11. தேறியே வருகின்ற காலமதை
தேசிகனென் அவதார நோக்கம் வழி
மாறுதல் செய்து இனிதே
மண்ணுலகை ஞானலோகம் ஆக்குவர்
அரங்கமகானின் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–